सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை

# மக்களின் சாசனம்

ஏப்ரல் 2014 வரை

# புதுச்சேரி அரசு
# மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை

~ ~ ~

## மக்களின் சாசனம்

### I. அறிமுகம்

மத்திய அரசின் அறிவுறுத்தலின் படி மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை 16-08-1996 அன்று புதுச்சேரி அரசு, சமூகநலத்துறையிலிருந்து பிரிக்கப்பட்டது. குழந்தைகள் மற்றும் பெண்களின் நலனில் தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்துறையின் நோக்கமாகும். துறையின் நிர்வாக அமைப்பு, மக்களுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் போன்றவை பொதுமக்களின் தகவலுக்காக இக்குடிமக்கள் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### II. துறையின் நோக்கங்கள்

சமுதாயத்தில் மிகவும் பின் தங்கிய குழந்தைகள் மற்றும் பெண்கள் மற்றும் முதியோருக்கு பொருளாதார, ஊட்டச்சத்து மற்றும் கல்விக்கான உதவிகளை வழங்குதல்.

### III. பயனடைவோர்

i. 6 மாதம் முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள்
ii. கர்ப்பிணிப் பெண்கள்
iii. பாலூட்டும் தாய்மார்கள்
iv. விதவைகள்/ஆதரவற்றப் பெண்கள்/ திருமணமாகாதவர்/ திருநங்கையர்
v. வளரிளம் பெண்கள்
vi. வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்கள்
vii. முதியவர்
viii. வன்முறை மற்றும் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட மகளிர்/ பெண் குழந்தைகள்
ix. குடும்ப பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள்.

### IV. துறையின் பல்வேறு பிரிவுகள்

#### அ. ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டப்பிரிவு

ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டமானது மத்திய அரசின் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் இளம் குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு கல்வி, சுகாதாரம் மற்றும் சத்துணவு வழங்கப்படுகிறது. இப்பிரிவு திட்ட அதிகாரியின் கீழ் செயல்படுகிறது.

#### ஆ. மகளிர் நலப் பிரிவு

பெண்களின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பிற்காக பல்வேறு நலத்திட்டங்கள் இப்பிரிவின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இது

மட்டுமின்றி புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுக்கழகம், மங்களம் திட்டம், மகளிர் ஆணையம் போன்ற நிறுவனங்கள் இப்பிரிவின் கீழ் இயங்குகின்றன. துணை இயக்குநர் (மகளிர் நலம்) இப்பிரிவின் அதிகாரியாக செயலபடுகிறார்.

**இ. சமூகப் பாதுகாப்பு பிரிவு**

வயது முதிர்ந்தவர்களையும், பொருளாதார நிலையில் பின் தங்கியவர்களையும் பாதுகாக்கும் நோக்கோடு இப்பிரிவின் கீழ் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பிரிவின் அதிகாரி துணை இயக்குநர் (சமூக பாதுகாப்பு)

**V. இத்துறையால் நடத்தப்படும் விடுதிகள்**

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | பணிபுரியும் மகளிர் மற்றும் மாணவியருக்கான தங்கும் விடுதி | காப்பாளர், பணிபுரியும் மகளிர் மற்றும் மாணவியருக்கான தங்கும் விடுதி, இராஜாஜி நகர், லாசுப்பேட்டை, புதுச்சேரி. |

**VI. இயக்குநரகம் மற்றும் துணை அலுவலகங்களின் முகவரி**

| வ. எண். | அலுவலகத்தின் முகவரி | தொலைபேசி |
|---|---|---|
| 1 | இயக்குநர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, எண் 50 முதல் வீதி, சித்தன்குடி, புதுச்சேரி | 0413-2244964 (Per)<br>0413-2242621<br>0413-2244964 (FAX) |
| 2 | முதுநிலை கணக்கு அதிகாரி, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, 50 முதல் வீதி, சித்தன்குடி, புதுச்சேரி | 0413-2242621 |
| 3 | துணை இயக்குநர் (மகளிர் நலம்), மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, 50 முதல் வீதி, சித்தன்குடி, புதுச்சேரி | 0413-2242621 |
| 4 | துணை இயக்குநர் (சமூக பாதுகாப்பு), மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, (ஜெயராம் திருமண நிலையம் எதிரில்) சித்தன்குடி, புதுச்சேரி | 0413-2246940 |
| 5 | திட்ட அதிகாரி, ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டக் குழுமம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, 50 முதல் வீதி, சித்தன்குடி, புதுச்சேரி | 0413-2242621 |
| 6 | குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, ஒ.கு.ந.தி. திட்டம் I, ஜி.கே. மூப்பனார் வணிக வளாகம், வில்லியனூர், புதுச்சேரி | 0413-2666184 |
| 7 | குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, ஒ.கு.ந.தி. திட்டம் III, எண். 1, முதல் குறுக்கு, சொர்ணா நகர், அரியங்குப்பம், புதுச்சேரி | 0413-2601934 |
| 8 | குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, ஒ.கு.ந.தி. திட்டம் IV, எண். 38, மகாத்மா காந்தி வீதி, முத்தியால்பேட்டை, புதுச்சேரி | 0413-2239430 |
| 9 | குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, ஒ.கு.ந.தி. திட்டம் V, சித்தன்குடி, புதுச்சேரி | 0413-2244785 |
| 10 | குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, ஒ.கு.ந.தி. திட்டம் II, பெருந்தலைவர் காமராஜர் வளாகம், Civil Station Complex, காரைக்கால் | 04368-223614 |
| 11 | நல அதிகாரி, மண்டல நிர்வாக அலுவலகம், மாஹே | 0490-2332370 |
| 12 | நல அதிகாரி, கிளை அலுவலகம், ஏனாம் | 0884-2321319 |

**VII.** மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையின் நிர்வாக அமைப்பு




பூ.ஆ.பாலன்/01-09-2009

## ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம்

| | | |
|---|---|---|
| 1. | திட்டத்தின் நோக்கங்கள் | 0-6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், இளம் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கு சத்துணவு வழங்குதல். முறை சாரா முன் பருவக் கல்வி மூலம் குழந்தைகளின் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, மொழி வளர்ச்சி, அறிவுத்திறன் வளர்ச்சியை ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்துதல் இத்திட்டம் 5 ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. 788 அங்கன்வாடி மையங்கள் இத்திட்டத்தின் கீழ் இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன.<br><br>1. ஒ.கு.ந.தி. திட்டம் I, வில்லியனூர் (157 மையங்கள்)<br>2. ஒ.கு.ந.தி. திட்டம் II, காரைக்கால் (161 மையங்கள்)<br>3. ஒ.கு.ந.தி. திட்டம் III, அரியாங்குப்பம் (151 மையங்கள்)<br>4. ஒ.கு.ந.தி. திட்டம் IV, முத்தியால்பேட்டை (142 மையங்கள்)<br>5. ஒ.கு.ந.தி. திட்டம் V, சித்தன்குடி (155 மையங்கள்)<br>மாஹே (13 மையங்கள்)<br>ஏனாம் (9 மையங்கள்) |
| 2 | அளிக்கப்படும் சேவைகள் | 1. இணை உணவு வழங்குதல்<br>2. மருத்துவப் பரிசோதனை<br>3. மருத்துவ மேல் பரிந்துரை<br>4. தடுப்பூசி போடுதல்<br>5. சத்துணவு மற்றும் சுகாதாரக் கல்வி<br>6. முறை சாரா முன் பருவக் கல்வி |
| 3 | பயனடைவோர் | 1. 0-6 வயதுக்குட்பட்ட குழந்தைகள்<br>2. கர்ப்பிணிப் பெண்கள்<br>3. பாலூட்டும் தாய்மார்கள்<br>4. 15-45 வயதுக்குட்பட்டப் பெண்கள்<br>5. வளரிளம் பெண்கள் |
| 4 | எங்கு பயனடைவது? | அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் அங்கன்வாடி மையம் மூலமாக |
| 5 | மேலும் தகவலுக்கு அணுக வேண்டியவர் | சம்பந்தப்பட்ட பகுதியின் குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி. |

## குலவிளக்கு உதவி நலத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | வறுமைக்கோட்டிற்குட்பட்ட கருவுற்ற தாய்மார்களுக்கு சத்தான உணவு பெறுவதற்காக (முதல் மற்றும் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும்) ₹ 500/- வீதம் வழங்கப்படும். |
| 2. | உதவித் தொகை | : | ₹ 500/- வழங்கப்படுகிறது. |
| 3. | தகுதிகள் | : | அ) விண்ணப்பதாரரின் வருட வருமானம் ₹ 24,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>ஆ) விண்ணப்பதாரர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரரோ/அவரது கணவரோ புதுச்சேரி பிரதேசத்தில் 5 ஆண்டிற்குக் குறையாமல் குடியிருப்பு பெற்றிருத்தல் வேண்டும்.<br>இ) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.<br>ஈ) இரண்டு பேறு காலத்திற்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும்<br>உ) கருவுற்ற 7ஆம் மாதத்திற்குப் பிறகுள்ளவரின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | அ) வருவாய்த்துறையிடமிருந்து பெறப்பட்ட குடியிருப்பு மற்றும் வருமானச் சான்றிதழ்<br>ஆ) அரசு மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவ சான்றிதழ்<br>இ) மார்பளவு புகைப்படம். |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | **புதுச்சேரி பிராந்தியம்**<br>துணை இயக்குனர் (மகளிர் மேம்பாடு)<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>நல அதிகாரி, மாஹே/ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : | நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும் |
| 7. | காலதாமதமானால் அணுகவேண்டிய முகவரி | : | **புதுச்சேரி பிராந்தியம்**<br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை,<br>புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## அரவணைப்பு உதவி நலத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் நிலையை உயர்த்துவதற்காகவும், பெண் குழந்தைகளுக்கு கூடுதல் சத்தான உணவளிப்பதற்காகவும், தாய்மார்களுக்கு ₹ 1200/- வீதம் வழங்கப்படுகிறது. |
| 2. | உதவித் தொகை | : | ₹ 1200/- வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. |
| 3. | தகுதிகள் | : | அ) விண்ணப்பதாரரின் வருட வருமானம் ₹ 24,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>ஆ) விண்ணப்பதாரர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரரோ/அவரது கணவரோ புதுச்சேரி பிரதேசத்தில் 5 ஆண்டிற்குக் குறையாமல் குடியிருப்பு பெற்றிருத்தல் வேண்டும்.<br>இ) விண்ணப்பதாரர் 18 வயதிற்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>ஈ) 01-04-2005 முதல் பிறந்த பெண் குழந்தைகளுக்கு விண்ணப்பப் படிவம் வழங்கப்படும்.<br>உ) ஒரு தாய் தனது இரண்டு பெண் குழந்தைகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | அ) வருவாய்த்துறையிடமிருந்து பெறப்பட்ட குடியிருப்பு மற்றும் வருமானச் சான்றிதழ்<br>ஆ) குழந்தையின் பிறப்புச் சான்றிதழ்<br>இ) ஆதார் அட்டை நகல் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | **புதுச்சேரி பிராந்தியம்**<br>துணை இயக்குனர் (மகளிர் மேம்பாடு)<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br><br>**காரைக்கால்**<br>குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br><br>**மாஹே/ஏனாம்**<br>நல அதிகாரி, மாஹே/ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : | நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும் |
| 7. | காலதாமதமானால் அணுகவேண்டிய முகவரி | : | **புதுச்சேரி பிராந்தியம்**<br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை,<br>புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

**<u>வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மணப்பெண்ணின் திருமணத்திற்காக உதவித் தொகை</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மணப்பெண்ணிற்கு திருமணத்திற்காக உதவித்தொகை வழங்கப்படுகிறது. |
| 2. | உதவித் தொகை | : | திருமண செலவிற்காக தலா ₹ 15,000/- வீதம் நிதியுதவி. |
| 3. | தகுதிகள் | : | அ) விண்ணப்பதாரரின் வருட வருமானம் ₹ 24,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>ஆ) புதுச்சேரி பிரதேசத்தில் 5 ஆண்டிற்குக் குறையாமல் பெற்றோர்/ பாதுகாவலர் குடியிருப்பு பெற்றிருத்தல் வேண்டும். இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்<br>இ) மணப்பெண்ணுக்கு முதல் தடவை நிகழும் திருமணத்திற்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும்<br>ஈ) திருமணம் சட்ட திட்டத்திற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.<br>உ) ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும்<br>ஊ) மணப்பெண்ணின் வயது 18 முடிந்திருத்தல் வேண்டும். மணமகன் வயது 21 முடிந்திருத்தல் வேண்டும்.<br>எ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை திருமணத்திற்கு 30 நாட்கள் முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும் |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | அ) வருவாய்த்துறையிடமிருந்து பெறப்பட்ட குடியிருப்பு மற்றும் வருமானச் சான்றிதழ்.<br>ஆ) திருமண அழைப்பிதழ்.<br>இ) மணப்பெண்ணின் பிறப்புச் சான்றிதழ்<br>ஈ) திருமணத்தை பதிவு செய்திருத்தல் வேண்டும். திருமணப்பதிவு சான்றிதழ் பதிவு செய்த 30 நாட்களுள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | **<u>புதுச்சேரி பிராந்தியம்</u>**<br>துணை இயக்குனர் (மகளிர் மேம்பாடு)<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**<u>காரைக்கால்</u>**<br>குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>**<u>மாஹே/ஏனாம்</u>**<br>நல அதிகாரி, மாஹே/ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : | நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும் |
| 7. | காலதாமதமானால் அணுகவேண்டிய முகவரி | : | **<u>புதுச்சேரி பிராந்தியம்</u>**<br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**<u>காரைக்கால்</u>**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**<u>மாஹே/ஏனாம்</u>**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## விதவை மகளிரின் மறுமணத்திற்கு ஊக்கத்தொகை

| | | |
|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : விதவைகள் சமுதாயத்தில் நல்ல முறையில் வாழ விதவைகள் மறுமணத்தை ஊக்குவிப்பதற்கு |
| 2. | உதவித் தொகை | : ₹ 20,000/- தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்படுகிறது. |
| 3. | தகுதிகள் | : 1) வருட வருமானம் ₹ 24,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2) விண்ணப்பதாரர் இந்திய குடியுரிமையும், புதுச்சேரி பிரதேசத்தில் 5 ஆண்டிற்கு குறையாமல் குடியிருப்பும் பெற்றிருத்தல் வேண்டும்<br>3) மணமகன் திருமணம் ஆகாதவராகவோ அல்லது மனைவியை இழந்தவராகவோ இருத்தல் வேண்டும். |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : 1) வருவாய்த்துறையிடமிருந்து பெறப்பட்ட குடியிருப்பு மற்றும் வருமானச் சான்றிதழ்.<br>2) திருமண அழைப்பிதழ்.<br>3) மணப்பெண்ணின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் மணமகனின் வயது சான்றிதழ்<br>4) முதல் கணவரின் இறப்புச் சான்றிதழ்<br>5) திருமண பதிவு சான்றிதழ்<br>6) மணப்பெண்ணிற்கு வருவாய் ஈட்டி தரக்கூடிய பிள்ளைகள் இல்லை என்ற உறுதிமொழி<br>7) சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமிருந்து மணமகனுக்கு முதல் திருமணம் என்றும் மணமகன் திருமணம் ஆகாதவர் அல்லது திருமணமாகி மனைவியை இழந்தவர் இன்பதற்கான சான்றிதழ்.<br>8) விண்னப்பதாரரின் ஆதார் அட்டையின் நகல் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : **புதுச்சேரி பிராந்தியம்**<br>துணை இயக்குனர் (மகளிர் மேம்பாடு)<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>நல அதிகாரி, மாஹே/ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும் |
| 7. | காலதாமதமானால் அணுகவேண்டிய முகவரி | : **புதுச்சேரி பிராந்தியம்**<br>இயக்குனர்,<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## <u>விதவை மகளிரின் குழந்தைகளுக்கு தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பயில செலவு செய்த கட்டணத்தொகையை திரும்ப அளித்தல்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | விதவை மகளிரின் குழந்தைகள் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பயில ஊக்குவிப்பதற்காக விதவை மகளிரின் குழந்தைகளுக்கு, சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து பயில செலவு செய்த கட்டணத்தொகையை திரும்ப அளித்தல். |
| 2. | உதவித் தொகை | : | மாதத்திற்கு ₹ 50/- வீதம் 6 மாதங்களுக்கு தட்டெழுத்து இளநிலைக்கும் 10 மாதங்கள் வரை தட்டெழுத்து மேல்நிலைக்கும் சுருக்கெழுத்துப் பயிற்சிக்கு வழங்கப்படுகிறது. |
| 3. | தகுதிகள் | : | 1) வருட வருமானம் ₹ 24,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2) விண்ணப்பதாரர் இந்திய குடியுரிமையும், புதுச்சேரி பிரதேசத்தில் 5 ஆண்டிற்கு குறையாமல் குடியிருப்பும் பெற்றிருத்தல் வேண்டும் |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | 1) வருவாய்த்துறையிடமிருந்து பெறப்பட்ட குடியிருப்பு மற்றும் வருமானச் சான்றிதழ்.<br>2) பயிற்று நிறுவனத்திடமிருந்து சான்றிதழ்.<br>3) கணவரின் இறப்பு சான்றிதழ்.<br>4) ஒரு தாய் தனது இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே விண்னப்பிக்க வேண்டும்<br>5) மூன்று மாதத்திற்கு கட்டனம் செலுத்திய ரசீது<br>6) ஆதார் அட்டையின் நகல்<br>7) ரேஷன் அட்டையின் நகல்<br>8) முதியோர் பென்ஷன் அட்டையின் நகல் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | <u>புதுச்சேரி பிராந்தியம்</u><br>துணை இயக்குனர் (மகளிர் மேம்பாடு)<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br><br><u>காரைக்கால்</u><br>குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br><br><u>மாஹே/ஏனாம்</u><br>நல அதிகாரி, மாஹே/ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : | நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும் |
| 7. | காலதாமதமானால் அணுகவேண்டிய முகவரி | : | <u>புதுச்சேரி பிராந்தியம்</u><br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br><u>காரைக்கால்</u><br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br><u>மாஹே/ஏனாம்</u><br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## விதவை பெண்களின் மகளுக்கு திருமண உதவி

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | விதவை மகளிர் குடும்பத்தில், திருமண வயதில் உள்ள ஒரு பெண்ணிற்கு திருமணம் செய்வதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. |
| 2. | உதவித் தொகை | : | திருமண செலவிற்காக தலா ₹ 20,000/- வீதம் நிதியுதவி. |
| 3. | தகுதிகள் | : | 1) வருட வருமானம் ₹ 24,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2) விண்ணப்பதாரர் இந்திய குடியுரிமையும், புதுச்சேரி பிரதேசத்தில் 5 ஆண்டிற்கு குறையாமல் குடியிருப்பும் பெற்றிருத்தல் வேண்டும்<br>3) மணமகளுக்கு 18 வயதும் மணமகனுக்கு 21 வயதும் பூர்த்தியாகியிருத்தல் வேண்டும்.<br>4) குடும்பத்தில் ஒரு பெண்ணின் திருமணத்திற்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும்<br>5) மணமகளுக்கு இதுவே முதலாவது திருமணமாக இருத்தல் வேண்டும்.<br>6) திருமணம் சட்ட திட்டத்திற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்<br>7) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை திருமணத்திற்கு 30 நாட்களுக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | 1) வருவாய்த்துறையிடமிருந்து பெறப்பட்ட குடியிருப்பு மற்றும் வருமானச் சான்றிதழ்.<br>2) திருமண அழைப்பிதழ்.<br>3) மணப்பெண்ணின் பிறப்புச் சான்றிதழ்<br>4) மணமகளின் தந்தையின் இறப்புச் சான்றிதழ்.<br>5) திருமணம் முடிந்து 60 நாட்களுக்குள் திருமண பதிவு சான்றிதழ்<br>6) விதவை மற்றும் மணமகளின் ஆதார் அட்டையின் நகல் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | **<u>புதுச்சேரி பிராந்தியம்</u>**<br>துணை இயக்குனர் (மகளிர் மேம்பாடு)<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**<u>காரைக்கால்</u>**<br>குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>**<u>மாஹே/ஏனாம்</u>**<br>நல அதிகாரி, மாஹே/ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : | நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும் |
| 7. | காலதாமதமானால் அணுகவேண்டிய முகவரி | : | **<u>புதுச்சேரி பிராந்தியம்</u>**<br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**<u>காரைக்கால்</u>**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**<u>மாஹே/ஏனாம்</u>**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## ஒரு/இரண்டு பெண் குழந்தையுடன் குடும்ப கட்டுப்பாடு செய்து கொண்ட குடும்பத்திற்கு அளிக்கப்படும் ஊக்கத்தொகை

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | பெற்றோர்களிடம் பெண் குழந்தையை பெற்றுக்கொள்ள விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், குடும்பத்தில் உள்ள பெண் குழந்தையின் நிலையை உயர்த்தவும் |
| 2. | உதவித் தொகை | : | ₹ 20,000/- மட்டும் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு, அப்பெண் குழந்தை 18 வயது நிறைவுற்ற பின் வட்டியுடன் கூடிய முதிர்வுத்தொகை அளிக்கப்படும்/இரண்டு பெண் குழந்தைகளுக்கு தலா ₹ 10,000/- |
| 3. | தகுதிகள் | : | 1) விண்ணப்பதாரரின் வருட வருமானம் ₹ 60,000/- க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2) திருமணத்தின் போது பெற்றோரில் தந்தை 21 வயதுக்கும் தாய் 18 வயதுக்கும் குறையாமல் இருத்தல் வேண்டும்<br>3) பெற்றோரில் யாராவது ஒருவர் அரசு மருத்துவமனையில் குடும்ப கட்டுப்பாடு செய்திருத்தல் வேண்டும்<br>4) புதுச்சேரி பிரதேசத்தில் 5 ஆண்டிற்குக் குறையாமல் குடியிருப்பு பெற்றிருத்தல் வேண்டும். இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்<br>5) விண்ணப்பதாரருக்கு ஒன்று (அல்லது) இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருத்தல் வேண்டும்<br>6) திருமணத்தை பதிவு செய்திருத்தல் வேண்டும். (பதிவுத்துறை/ நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்து) |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | 1) வருவாய்த்துறையிடமிருந்து பெறப்பட்ட குடியிருப்பு மற்றும் வருமானச் சான்றிதழ்.<br>2) விண்ணப்பதாரரின் திருமணப்பதிவு சான்றிதழ்.<br>3) குடும்ப கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை சான்றிதழ்<br>4) பெற்றோரின் வயதுச் சான்றிதழ்<br>5) பெண் குழந்தை/குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்<br>6) ரேஷன் அட்டை நகல் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை.<br>7) குடும்ப புகைப்படம்<br>8) ஆதார் அட்டையின் நகல் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | **புதுச்சேரி பிராந்தியம்**<br>துணை இயக்குனர் (மகளிர் மேம்பாடு)<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>நல அதிகாரி, மாஹே/ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : | நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும் |
| 7. | கால தாமதமானால் அணுக வேண்டிய முகவரி | : | **புதுச்சேரி பிராந்தியம்**<br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## ஏழை பெற்றோர்களின் குடும்பத்தில் 8ம் வகுப்பு, 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு வரை பயிலும் ஒரே பெண் குழந்தைக்கு உதவித்தொகை

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | ஒவ்வொரு பெற்றோர்களும் பெண் குழந்தையின் மதிப்பை தெளிவாக அறிந்து கொள்ளவும், மேலும் பெற்றோர்கள் அப்பெண் குழந்தையை தங்களுடைய சொத்தாக நடத்தவும், அப்பெண் குழந்தையின் திருமணத்தின் போது பெற்றோர்களின் சுமையை பகிர்ந்து கொள்ளவும் |
| 2. | உதவித் தொகை | : | ₹ 25,000/- மட்டும் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு அப்பெண் குழந்தை 18 வயது நிறைவுற்ற பின் வட்டியுடன் கூடிய முதிர்வுத்தொகை தேசிய சேமிப்பு பத்திரமாக அளிக்கப்படும் |
| 3. | தகுதிகள் | : | 1) பெற்றோரின் வருமானம் ₹ 24,000/- மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்<br>2) பெற்றோர்கள் இருவரும் இந்திய குடிமைக்களாகவும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்தவராகவும் அல்லது 5 ஆண்டிற்கு குறையாமல் குடியிருப்பு பெற்றிருத்தல் வேண்டும்<br>3) பெற்றோர்கள் அப்பெண் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியரால் பரிந்துரை செய்த சான்றிதழ் அளிக்க வேண்டும்<br>4) பெற்றோர்களுக்கு ஒரே ஒரு பெண் குழந்தையைத் தவிர வேறு குழந்தையும் இல்லை என்ற சான்றிதழ் அளிக்க வேண்டும் |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | 1) வருவாய்த்துறையிடமிருந்து பெறப்பட்ட குடியிருப்பு மற்றும் வருமானச் சான்றிதழ்.<br>2) பெண் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ்<br>3) பெற்றோர்களுக்கு ஒரே ஒரு பெண் குழந்தையை தவிர வேறு குழந்தை இல்லை என்ற சான்றிதழ் பாராளுமன்ற/ சட்டமன்ற உறுப்பினர்/ நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்து ஆணையரிடமிருந்து பெற்று அளிக்க வேண்டும்<br>4) பெற்றோர்கள் அப்பெண் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியரால் பரிந்துரை செய்யப்பட்ட சான்றிதழ்<br>5) ரேஷன் அட்டை நகல்<br>6) வாக்காளர் அடையாள அட்டை நகல்<br>7) குடும்ப புகைப்படம்<br>8) குழந்தை மற்றும் பெற்றோரின் ஆதார் அட்டையின் நகல்<br>9) குழந்தையின் படிப்பு சான்றிதழ் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | <u>புதுச்சேரி பிராந்தியம்</u><br>துணை இயக்குனர் (மகளிர் மேம்பாடு)<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br><u>காரைக்கால்</u><br>குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br><u>மாஹே/ஏனாம்</u><br>நல அதிகாரி, மாஹே/ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : | நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும் |
| 7. | காலதாமதமானால் அணுகவேண்டிய முகவரி | : | <u>புதுச்சேரி பிராந்தியம்</u><br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br><u>காரைக்கால்</u><br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br><u>மாஹே/ஏனாம்</u><br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

# பணிபுரியும் மகளிர்/ மாணவியர் விடுதி

| | | |
|---|---|---|
| 1. திட்டத்தின் குறிக்கோள் | : | பணியின் காரணமாக வீட்டில் தங்க இயலாத மகளிருக்கு தகுந்த குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பான தங்குமிடம் அளிப்பதற்காக. |
| 2. விடுதியில் செய்யப்பட்டுள்ள வசதிகள் | : | விடுதியில் தங்கும் ஒவ்வொருவருக்கும் மெத்தையுடன் கூடிய கட்டில், பூட்டும் வசதியுள்ள அலமாரி, தொலைக்காட்சி, தினசரி, புத்தகங்கள் ஆகியவைகள் வழங்கப்படும். |
| 3. வாடகை மற்றும் உணவுக்கான செலவு | : | வாடகை பிரதி மாதம் ₹ 650/- பணிபுரியும் மகளிர் ₹ 500/- மாணவியர். உணவுக்கான ஒரு மாத செலவு விடுதியில் தங்குபவர்களுக்குள் பகிர்ந்து கொள்ளப்படும். |
| 4. தகுதிகள் | : | 1) அரசு அலுவலகங்களில், பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள், கல்லூரி மாணவியர்<br>2) தங்குபவரின் மாத வருமானம் ₹ 5000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 5. அளிக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | பணிபுரியும் அலுவலகத்திலிருந்து வருமானச் சான்றிதழ் மற்றும் கல்வி சான்றிதழ் |
| 6. யாரிடம் விண்ணப்பிப்பது | : | **புதுச்சேரி :**<br>துணை இயக்குநர் (மகளிர் நலம்),<br>மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br><br>**காரைக்கால் :** குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால். |
| 7. பரிசீலனைக்கான காலம் | : | - |
| 8. தாமதமெனில் யாரை அணுகுவது | : | **புதுச்சேரி :** இயக்குநர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br><br>**காரைக்கால் :** மாவட்ட ஆட்சியர், காரைக்கால். |

## வரதட்சணை ஒழிப்பு சட்டம், 1961/ விதிமுறைகள் 1998

இச்சட்டத்தின் கீழ் புதுச்சேரி மாநிலத்திற்கான தனிச்சட்டம் 1998ல் இயற்றப்பட்டது. இதன் கீழ் புதுச்சேரி மாநிலத்தின் நான்கு பகுதிகளுக்கும் வரதட்சணை தடுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர் மூலம் சம்பந்தப்பட்டவர்களின் புகார்கள் விசாரிக்கப்படுகின்றன.

| வ. எண். | அதிகாரி | பகுதி |
|---|---|---|
| 1. | இயக்குநர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி | புதுச்சேரி மாநிலம் முழுவதுக்கும் |
| 2. | துணை இயக்குநர் (மகளிர் நலம்), மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி | புதுச்சேரி பகுதி |
| 3. | குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, காரைக்கால் | காரைக்கால் பகுதி |
| 4. | பிராந்திய நிர்வாக அதிகாரி, மாஹே | மாஹே பகுதி |
| 5. | பிராந்திய நிர்வாக அதிகாரி, ஏனாம் | ஏனாம் பகுதி |

## குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம்/விதிகள் 2005

மத்திய அரசால் இச்சட்டம் 26-10-2006 ஆண்டு அமுல் படுத்தப்பட்டது. இம்மாநிலத்தைப் பொறுத்தவரை இச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அதிகாரிகள், பாதுகாப்பு இல்லங்கள், மருத்துவ வசதிகள் ஆகியவை நான்கு பிராந்தியங்களுக்கும் அறிவிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சேவை புரிவோரை நியமனம் செய்ய தன்னார்வலத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆறு குடும்ப நல மையங்கள் துவக்கப்பட்டு, ஆறு பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்ட அலுவலகங்களில் குடும்ப நல ஆலோசககராகவும் பணியாற்றுகின்றனர்.

## பணியிடங்களில் மகளிருக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள்

உச்சநீதி மன்ற தீர்ப்பின் படி பணிபுரியும் மகளிருக்குப் பணியிடங்களில் நிகழும் பாலியல் கொடுமைகளை விசாரிக்க பிராந்திய வாரியான புகார்க்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துறையின் இயக்குநர் நான்கு பிராந்திய குழுக்களின் மாநில அளவிலான அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## குழந்தை திருமணத் தடை சட்டம், 2006

இச்சட்டத்தின் கீழ் புதுச்சேரி மாநிலத்திற்கான விதிமுறைகள் உருவாக்கப்பட்டு 16-11-2010 அன்று அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. மாநிலத்தின் நான்கு பிராந்தியங்களுக்கும் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள் கீழ்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது

1) துணை இயக்குநர் (மகளிர் நலம்) – புதுச்சேரி பகுதி

2) குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி – காரைக்கால் பகுதி

3) பிராந்திய நிர்வாக அதிகாரி – மாஹே பகுதி

4) பிராந்திய நிர்வாக அதிகாரி – ஏனாம் பகுதி

## புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுக்கழகம்

புதுச்சேரி மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுக்கழகம் 31-03-1993 அன்று துவக்கப்பட்டது. இக்கழகம் மூலம் பெண்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் சுய தொழில் செய்ய நிதியுதவியும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. இக்கழகத்திற்கு தேவையான நிதி இத்துறையால் ஒதுக்கப்படுகிறது.

## மங்களம் திட்டம்

இத்திட்டம் 13-03-1995 முதல் தனியாக செயல்படத்துவங்கியது. மங்களம் திட்டம் நகர்ப்புற/கிராமப்புற மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கியத்துவ அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உட்பட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் செயல்படத் தேவையான நிதி இத்துறையால் வழங்கப்படுகிறது.

## புதுச்சேரி மகளிர் ஆணையம்

புதுச்சேரி மகளிர் ஆணையம் 05-10-2004 அன்று அமைக்கப்பட்டது. புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த பெண்களின் நிலையை உயர்த்துவது, பெண்களுக்கு நிகழும் விரும்பத்தகாத செயல்களைத் தடுப்பதும் இவ்வாணையத்தின் பணிகளாகும். ஆணையத்திற்கு தேவையான நிதி இத்துறையால் ஒதுக்கப்படுகிறது.

## பெண்களுக்கான மாவட்ட ஆதார மையம் (மத்திய அரசு திட்டம்)

இந்திய அரசு, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை வழிகாட்டுதலின் படி மாநில அதிகார குழு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பெண்களின் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு முதல்வர், மற்றும் அமைச்சர், தலைமை செயலர் மற்றும் செயலர் ஆகியோர் மாநில அதிகார குழு வழிகாட்டுதலின் படி மகளிர் சம்பந்தமான பிரச்சனைகளை கவனிப்பார்கள். மாநிலத்தில் உள்ள பெண்களின் சமூக பொருளாதார, மற்றும் கல்வி முன்னேற்றத்திற்காக மாவட்ட ஆதார மையம் உருவாக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு அனைத்து வளர்ச்சி திட்டங்கள் சென்றடைய வலிமைப்படுத்துவதே இந்த குழுவின் நோக்கம். முன்னிலைபடுத்துவது ஒத்துழைப்பது போன்ற செயல்களின் மூலம் திட்டங்களை செயல்படுத்தும், அமைச்சகங்கள் மற்றும் அரசு துறைகளின் பங்களிப்பின் மூலம் வளர்ச்சி, ஆக்கமுள்ள சூழல் வாயிலாக சமூக மாற்றத்தை உருவாக்கலாம். இந்த மாநில ஆதார மையம் புதுச்சேரி மகளிர் மற்றம் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு கழகத்தின் கீழ் செயல்படுகிறது.

## பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தப்பட்ட மகளிருக்கான பொருளாதார உதவி மற்றும் ஆதார சேவைகள் அளித்தல் (மத்திய அரசு திட்டம்)

இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், "பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட மகளிர்க்கான மறுசீரமைப்பு முறைமை- பொருளாதார உதவி மற்றும் ஆதரவு சேவைகள்" திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டம் நமது புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசின் வழிகாட்டுதலின் படி குற்றம் சார்ந்த சேதங்களுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வாரியம், மாநில அளவில் ஒன்றும், மாவட்ட அளவிலான இரண்டு வாரியங்கள் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## குடும்ப நல ஆலோசனை மையம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட ஒரு நபர், முதலில் அவரைப்பற்றி அறியச் செய்வதுடன் அப்பிரச்சனையின் மூலக்காரணத்தை புரிய வைத்து இதை தைரியமாக எதிர் நோக்கி பின் அப்பிரச்சனைக்குரிய தீர்வை பாதிக்கப்பட்ட நபரைக் கொண்டே அறியச் செய்தல். |
| 2. | இருப்பிடம் | : | மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, புதுச்சேரி.<br><br>ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்ட அதிகாரி அலுவலகம், திட்டம் – I, II, III, IV & V, புதுச்சேரி மற்றும் காரைக்கால்<br><br>நல அதிகாரி அலுவலகம், மாஹே மற்றும் ஏனாம் |
| 3. | மையத்தை அணுகுவதற்கான முக்கிய காரணங்கள் | : | வரதட்சனை பிரச்சனை, குடி பிரச்சனை, கணவனுக்கும், மனைவிக்கும் இடையே தீர்வு காணமுடியாத சண்டை சச்சரவுகள் போன்றன |
| 4. | யாரை தொடர்பு கொள்வது | : | 1. திருமதி. ஸ்டெல்லா மேரி, குடும்ப நல ஆலோசகர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, புதுச்சேரி. (தொலைபேசி 0413-2244782)<br>2. திரு. சவுந்தரராசு, குடும்ப நல ஆலோசகர், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம், வில்லியனூர் பிரிவு – I, புதுச்சேரி (தொலைபேசி 0413-2660909)<br>3. திரு. ரவிசங்கர், குடும்ப நல ஆலோசகர், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம், பிரிவு - II, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, காரைக்கால் (தொலைபேசி 04368-228220)<br>4. திரு. கிருஷ்ணமூர்த்தி, குடும்ப நல ஆலோசகர், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம், பிரிவு - III, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, அரியாங்குப்பம், புதுச்சேரி (தொலைபேசி 0413-2601518)<br>5. திருமதி. சித்ரா பிரியதர்ஷினி, குடும்ப நல ஆலோசகர், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம், பிரிவு - IV, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, முத்தியால்பேட்டை, புதுச்சேரி (தொலைபேசி 0413-2235858)<br>6. திரு. முகமது முனவர், குடும்ப நல ஆலோசகர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, மாஹே (தொலைபேசி 0490-2334890) |
| 5. | இதர சேவைகள் | : | குடும்ப பிரச்சனைகளில் தீர்வு காண, இலவச சட்ட ஆலோசனை மையம், குறுகிய கால தங்கும் விடுதி, காவல் நிலையத்தின் மூலம் தீர்வு காணுதல் போன்றவற்றிற்கு பரிந்துறை செய்தல் |

## முதியோர் மற்றும் ஆதரவற்றோர் உதவித்தொகை

| | | | |
|---|---|---|---|
| 1 | திட்டத்தின் குறிக்கோள் | : | முதியோர், விதவைகள், ஆதரவில்லாத பெண்கள், திருமணமாகாத மகளிர் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு உதவும் பொருட்டு அவர்கள் தங்களது சிறு சிறு பணத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக மாதந்தோறும் ₹ 1100/- உதவித்தொகையாக வழங்கப்படுகிறது |
| 2. | அளிக்கும் உதவித்தொகை | : | மாதம் ஒன்றுக்கு ₹ 1100/- வீதம் முதியோர்களுக்கும், கணவரால் கைவிடப்பட்டவர்களுக்கும், முதிர்கன்னிகளுக்கும், விதவைகளுக்கும், திருநங்கைகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. |
| 3. | தகுதிகள் | : | 1. 55 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் இருபாலரும்.<br>2. 21 வயதிற்கு மேற்பட்ட விதவைகள்.<br>3. கணவரால் கைவிடப்பட்டவர் (ஏழு வருடங்கள் தொடர்ந்து கணவரோடு வாழாதவர்)<br>4. திருமணமாகாத மகளிர் (40 வயதுக்கு மேற்பட்ட முதிர்கன்னிகள்)<br>5. திருநங்கை (40 வயதுக்கு மேற்பட்டவர்) |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | 1. விண்ணப்ப படிவத்தில் இணைக்கப்பட்டுள்ள வருமானம் (₹24,000/-), குடியுரிமை மற்றும் அடையாளச் சான்றிதழ்<br>2. பிறப்பு/வயதுக்கான சான்றளிக்கப்பட்ட நகல்<br>3. சான்றளிக்கப்பட்ட ஆதார் அட்டையின் நகல்<br>3. குடும்ப உணவு பங்கீடு அட்டை மற்றும் தேர்தல் அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட நகல்<br>4. விண்ணப்பதாரர் விதவை எனில், கணவருடைய இறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல்<br>5. விண்ணப்பதாரர் கணவரால் கைவிடப்பட்டவர் எனில் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அங்கன்வாடி ஊழியரிடமிருந்தும், விண்ணப்பதாரர் கணவரிடமிருந்து 7 வருடங்கள் அல்லது அதற்கு மேல் பிரிந்து வசிக்கிறார் என்பதற்கான சான்றிதழ் மற்றும் உறுதிமொழி ஆவணம் (படிவம் I)<br>6. விண்ணப்பதாரர் திருமணமாகாத முதிர்கன்னி எனில் (படிவம்- II) உறுதி மொழி ஆவணம்<br>7. விண்ணப்பதாரர் திருநங்கை எனில் 40 வயதுக்கு மேற்பட்டவர் என்பதற்கான பிறப்புச் சான்றிதழ் அல்லது வயது சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல் மற்றும் அரசு மருத்துவ அதிகாரியால் அளிக்கப்பட்ட மருத்துவ சான்றிதழ் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | 1. துணை இயக்குனர் (சமூக பாதுகாப்பு பிரிவு) மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி<br>2. குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>3. நல அதிகாரி, மாஹே.<br>4. நல அதிகாரி, ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசீலிக்கும் காலம் | : | இறப்பு மற்றும் பெயர் நீக்கலால் ஏற்படும் காலி இடங்களுக்கும் மற்றும் நிதி நிலைமையை பொறுத்து அவ்வப்பொழுது குறித்த காலங்களில் விண்ணப்பங்கள் பரிசீலித்து தேர்ந்தெடுக்கப்படும். |
| 7. | தாமதம் ஏற்பட்டால் விண்ணப்பதாரர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | **புதுச்சேரி பிராந்தியம்**<br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## முதியோர் உதவித்தொகை பெறுபவர்களின் மருத்துவ சிகிச்சைக்கான உதவித்தொகைத் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | காசநோய்/ புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள முதியோர்/ விதவை உதவித் தொகை பெறுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் பொருட்டு அவர்தம் மருத்துவ செலவுக்காக மாதம் ₹100/- நிதியுதவி அளித்தல் |
| 2. | அளிக்கும் உதவித்தொகை | : | முதியோர் உதவித்தொகையல்லாது கூடுதலாக பிரதி மாதம் ₹ 100/- வழங்கப்படுகிறது. |
| 3. | தகுதிகள் | : | முதியோர் உதவித்தொகை பெறுபவர்கள் காசநோய் மற்றும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | 1. அரசு மருத்துவரின் சான்றிதழ்<br>2. முதியோர் உதவித்தொகை அடையாள அட்டையின் நகல் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | 1. துணை இயக்குனர் (சமூக பாதுகாப்பு பிரிவு) மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி<br>2. குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>3. நல அதிகாரி, மாஹே.<br>4. நல அதிகாரி, ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசிலிக்கும் காலம் | : | மனுக்கள் பெறப்பட்டதும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் |
| 7. | தாமதம் ஏற்பட்டால் விண்ணப்பதாரர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | **<u>புதுச்சேரி பிராந்தியம்</u>**<br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**<u>காரைக்கால்</u>**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**<u>மாஹே/ஏனாம்</u>**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## முதியோர் மற்றும் ஆதரவற்றோர் உதவித்தொகை பெறுபவரின் ஈமச்சடங்கிற்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் குறிக்கோள் | : | முதியோர் மற்றும் ஆதரவற்றோர் உதவித்தொகை பெறும் நபர் இறப்பின், அவரது ஈமச்சடங்கிற்கு நிதியுதவி வழங்குதல் |
| 2. | அளிக்கும் உதவித்தொகை | : | ₹ 2,000/- வழங்கப்படுகிறது. |
| 3. | தகுதிகள் | : | 1. முதியோர் மற்றும் ஆதரவற்றோர் உதவித்தொகை பெறுபவர் இறந்துவிட்டால் அவருடைய வாழ்நாளில் பாதுகாத்து அவருடைய ஈமச்சடங்கை செய்தவராக இருத்தல் வேண்டும்.<br>2. உதவித்தொகை பெறுபவர் இறந்து 60 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். |
| 4. | இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | 1. முதியோர், ஆதரவற்றோர் உதவித்தொகை அடையாள அட்டை.<br>2. உரிய அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட ஒரிஜினல் இறப்பு சான்றிதழ்.<br>3. இறந்தவர் மற்றும் விண்ணப்பதாரரின் உறவுமுறையை நிரூபிக்கும் சான்றிதழ்.<br>4. சம்பந்தப்பட்ட அங்கன்வாடி ஊழியர்/பஞ்சாயத்து தலைவர் அல்லது பொறுப்பான அந்தஸ்தில் உள்ளவரிடமிருந்து சான்றிதழ்<br>5. இருவரது ரேஷன் கார்டு, தேர்தல் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டையின் நகல்கள்<br>6. ஓய்வூதியதாரரின் அஞ்சல் நிலையம்/ வங்கியில் ஓய்வூதியம் பெறும் கணக்கிற்கான நகல்கள் |
| 5. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | 1. துணை இயக்குனர் (சமூக பாதுகாப்பு பிரிவு) மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி<br>2. குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>3. நல அதிகாரி, மாஹே.<br>4. நல அதிகாரி, ஏனாம். |
| 6. | மனுக்களை பரிசிலிக்கும் காலம் | : | மனுக்கள் பெறப்பட்டதும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் |
| 7. | தாமதம் ஏற்பட்டால் விண்ணப்பதாரர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | **புதுச்சேரி பிராந்தியம்**<br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br>**காரைக்கால்**<br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br>**மாஹே/ஏனாம்**<br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| 1. திட்டத்தின் குறிக்கோள் | : | ஆதிதிராவிடர், மீனவர் மற்றும் புதுச்சேரி கைத்தறி நெசவாளர்கள் நலநிதி சட்டம் 1989 கீழ் வருபவர்கள் அல்லாத சிவப்பு/மஞ்சள் குடும்ப உணவு பங்கீட்டு அட்டை வைத்துள்ள மக்களுக்கு வருடத்திற்கு ஒரு முறை இலவச வேட்டி சேலை வழங்குதல் |
| 2. அளிக்கும் உதவி | : | குடும்பம் ஒன்றிற்கு வருடத்திற்கு ஒரு முறை ஒரு புடவை, ரவிக்கை துண்டு, கைலி மற்றும் துண்டு வழங்கப்படும். |
| 3. தகுதிகள் | : | குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறையினரால் வழங்கப்பட்ட சிவப்பு/மஞ்சள் நிற அட்டைத்தாரர்கள் (மீனவர்கள், நெசவாளர் நல நிதி சட்டம், 1989 கீழ் வருபவர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் நீங்கலாக) |
| 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | இதற்கென தனியாக விண்ணப்பம் தேவையில்லை. சிவப்பு/மஞ்சள் உணவு பங்கீட்டு அட்டைத்தாரர் அருகில் உள்ள அங்கன்வாடியில் பதிவு செய்து இருத்தல் வேண்டும். |
| 5. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | 1. துணை இயக்குனர் (சமூக பாதுகாப்பு பிரிவு) மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை, புதுச்சேரி<br>2. குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, காரைக்கால்.<br>3. நல அதிகாரி, மாஹே.<br>4. நல அதிகாரி, ஏனாம். |
| 6. மனுக்களை பரிசிலிக்கும் காலம் | : | ஆண்டுக்கு ஒரு முறை |
| 7. தாமதம் ஏற்பட்டால் விண்ணப்பதாரர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | <u>புதுச்சேரி பிராந்தியம்</u><br>இயக்குனர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, புதுச்சேரி.<br><u>காரைக்கால்</u><br>மாவட்ட ஆட்சியர், காரைக்கால்.<br><u>மாஹே/ஏனாம்</u><br>மண்டல நிர்வாகி, மாஹே/ஏனாம். |

## இந்திரா காந்தி மகப்பேறு நல உதவி திட்டம்

(சோதனை திட்டம் – ஏனாம் பகுதி மட்டும்) மத்திய அரசு உதவி பெறும் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | குறிக்கோள் | : | வேலைக்கு செல்லும் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் பேறு காலத்தில், அவர்களின் பணிச்சுமையையும், வருமான இழப்பையும் ஈடுசெய்யும் வகையிலும், குழந்தை பிறப்பதற்கு முன்பும், பின்பும் போதிய ஓய்வு எடுக்க வழி செய்வது. |
| 2. | நல உதவி தொகை | : | ஒவ்வொரு பயனாளியும், முன் பேறு கால மற்றும் பின் பேறு கால உடல் நல பரிசோதனை, தடுப்பூசிகள் போட்டுக்கொள்வது, முதல் ஆறு மாத காலத்திற்கு தாய்பால் மட்டுமே குழந்தைக்கு உணவாக அளித்தல் போன்றவைகளை சரியாக முடித்து இருந்தால் ரூ.4000/- மூன்று தவணைகளில் அளிக்கப்படும். |
| 3. | தகுதிகள் மற்றும் பயனாளிகள் | : | 1) 19 வயது நிரம்பிய கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும். வருமான உச்சவரம்பு இல்லை.<br>2) அனைத்து அரசு ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய மகப்பேறு விடுமுறை அளிப்பப்படுவதால் அவர்களுக்கு இத்திட்டம் பொருந்தாது.<br>3) பயனாளிகள் முதல் குழந்தை பெற்ற பிறகு இரண்டாவது முறை இரட்டை குழந்தைகளை ஈன்றெடுத்தாலும் மொத்தம் மூன்று குழந்தைகள் இருந்தாலும், மகப்பேறு உதவி இத்திட்டத்தின் மூலம் அளிக்கப்படும் |
| 4. | விண்னப்பிக்கும் முறை | : | 1) கருவுற்ற பெண்கள் முதல் 4 மாத்திற்குள்ளாகவே அங்கன்வாடியில் பதிவு செய்ய வேண்டும்.<br>2) பதிவு செய்த ஒவ்வொரு பயனாளிக்கும் தாய் சேய் நல அட்டை அங்கவாடி ஊழியர்களிடமிருந்து பெற்று அதில் இத்திட்டத்திற்கு தேவையான அனைத்து விவரங்களையும் நேரத்துடன் துணை சுகாதார செவிலியர் மற்றும் அங்கவாடி ஊழியர் மூலமாக பூர்த்தி செய்ய வேண்டும்.<br>3) மகப்பேறு நல உதவிகள் தாய் சேய் நல அட்டையில் உள்ள அனைத்து விவரங்களும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தால் அதனை நல அதிகாரி, ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, ஏனாம் அவர்கள் பரிசீலனை செய்து இத்திட்ட பயன்களை வழங்குவார். |
| 5. | விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் காலம் | : | இத்திட்டத்திற்கென்று தனி விண்ணப்பம் கிடையாது<br>கருவுற்ற 4 மாதத்திற்குள்ளாக அந்தந்த அங்கன்வாடியில் பயனாளிகளின் பெயரை பதிவு செய்தல் வேண்டும்<br>நிதிநிலைமைக்கேற்ப, விண்ணப்பங்கள் தகுந்த காலங்களில் பரிசீலிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர் |
| 6. | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | நல அதிகாரி, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை,ஏனாம்<br>மண்டல நிர்வாகி, ஏனாம். |

## வளரிளம் பருவப் பெண்களின் அதிகாரத்திற்கான ராஜீவ்கந்தி திட்டம் (சோதனைத் திட்டம் – காரைக்கால் மட்டும்) மத்திய அரசு திட்டம்

| | | |
|---|---|---|
| 1. திட்டத்தின் குறிக்கோள் | : | பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத வளரிளம் பெண்களின் உடல் நலம் பேணுவது, மேம்பட்ட ஊட்டச்சத்து மற்றும் விடுமுறைகால திறமைகளை வெளிப்படுத்துதல் |
| 2. அளிக்கும் உதவி | : | 1) 4 கிலோ அரிசி மற்றும் 1.125 கி.கிராம் கொண்டைக் கடலையும் மாதந்தோறும் பயனாளிகளின் வீட்டிற்கே வழங்குதல்.<br>2) இரும்பு மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல்<br>3) உடல்நல பரிசோதனை மற்றும் சுகாதார சேவைகளை செய்தல்<br>4) ஆரோக்கியமான மற்றும் சத்துணவுக் கல்வி வழங்குதல்<br>5) பாலியல், சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் மற்றும் குழந்தை பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வு வழங்குதல்<br>6) பவாழ்க்கைதரம் பற்றிய பொதுச்சேவைகளை கல்வி மூலம் கற்பித்தல் |
| 3. தகுதிகள் | : | 11 வயதிலிருந்து 14 வயதுடைய வளரிளம் பெண்கள் (பள்ளி செல்லாத குழந்தைகள்)<br>14 வயது முதல் 18 வயதுள்ள வளரிளம் பெண்கள் (பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லா அனைத்து குழந்தைகள்) |
| 4 விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்பிக்கும் முறை | : | இந்த திட்டத்திற்கென தனியாக விண்ணப்பம் ஏதும் இல்லை. 11 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பெண்கள் அருகாமையில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த பயனாளிகளுக்கு ‘கிஷோரி கார்டு’ வழங்கப்படும். |
| 5. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | : | ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி, கிளை அலுவலகம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை, காரைக்கால். |